DINAMALAR

6 MAR 2022

PAGE 11

# ‘உள்நாட்டு தொழில்நுட்பங்கள் மூலமே பிரச்னைகளுக்கு தீர்வு’

**புதுச்சேரி, மார்ச் 6–**

‘திறன் மேம்பாடு மற்றும் பிரச்னைகளுக்கு உள்நாட்டு தொழில்நுட்பங்களை கொண்டே தீர்வுகளை பெற ஊக்குவிக்கப்பட்டு வருகிறது’ என இந்திய விமானப்படை உதவி தலைமை தளபதி ஏர் வைஸ் மார்ஷல் ராஜிவ் ஷர்மா தெரிவித்தார்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் நடந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில், அவர் பேசியதாவது:

இந்திய விமானப்படையின் மனிதவள மேம்பாட்டு’ திட்டத்தின் ஒரு அங்கமான ‘ஆகாஷ்தீப்’ திட்டம், விமானப்படை வீரர்களின் உயர் கல்வி விருப்பங்களை நிறைவேற்றி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக இந்திய விமானப்படை புதுச்சேரி பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்திய விமானப்படையின் தேவைக்கு உட்பட்ட துறைகளில் விமானப்படை அதிகாரிகள் பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை தொடர்வர்.

இந்திய விமானப்படையில் திறன் மேம்பாடு மற்றும் பிரச்னைகளுக்கு உள்நாட்டு தொழில்நுட்பங்களை கொண்டே தீர்வுகளை பெற ஊக்குவித்து வருகிறது. அதிகாரிகள் பல்வேறு துறைகளில் உயர் தகுதிகளை பெறுவதற்காகத் தான் ஆகாஷ்தீப் போன்ற திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன.

இவ்வாறு அவர் பேசினார்.

DINAKARAN

6 MAR 2022

PAGE 5

**PONDICHERRY UNIVERSITY**
**ENGINEERING WING**

No: PU/EW/Tender/2021-22/10552 Date: 04.03.2022

**SHORT TENDER NOTICE**

For and on behalf of Pondicherry University, the Assistant Engineer, Engineering wing, Pondicherry University invites sealed item rate tenders from the eligible contractors /Specialized agencies for the works of:

1. Providing and fixing fire Hydrant pipeline in Directorate of Distance Education Building.

   Estimate cost: Rs.6,11,938/-

   The tender forms and other details may be downloaded from website https://eprocure.gov.in/eprocure/app & www.pondiuni.edu.in and must be submitted through https://eprocure.gov.in/eprocure/app ONLY.

**ASSISTANT ENGINEER(Civil)**

PAGE 8

# இந்திய ராணுவம், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்



புதுச்சேரி, மார்ச்.6–

பாண்டிச்சேரி பல்கலைக் கழகம் நேற்று முன்தினம் இந்திய விமானப்படையுடன் (கல்வி இயக்குநரகம்) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. விமானப்படை அதிகாரிகளுக்கு புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் முதுகலை படிப்புகள் மற்றும் ஆராய்ச்சி படிப்பைத் தொடர இது உதவுகிறது.

இந்நிகழ்ச்சியில், துணை வேந்தர் குர்மீத் சிங் பேசுகையில்:

தேசத்தின் மீதான இந்திய ஆயுதப் படைகளின் அர்ப்பணிப்பு மற்றும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அவர் களின் கடமை உணர்வு பாராட்டிற்குரியது. குறிப்பாக இந்திய விமானப்படையின் நேரக்கட்டுப்பாடு மற்றும் பணி சார்ந்த அணுகுமுறையை மற்றவர்கள் முன்மாதிரியாகக் எடுத்துக்கொள்ள கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் உள்ள துறைகளைத் தவிர்த்து முடிந்தவரை மேலும் பல்வேறு துறைகளில் இந்திய விமானப்படை அதிகாரிகளுக்கு அதிகபட்ச உதவியை வழங்குவதில் புதுவை பல்கலைக்கழகம் மகிழ்ச்சியடையும்.

மேலும், எதிர்காலத்தில் பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகம் மூலம் அதிகாரி அல்லாது விமானப்படை வீரர்களுக்கும் பட்ட படிப்புகளை வழங்குவது குறித்து பல்கலைக்கழகம் பரிசீலிக்கும். 2012 ஆம் ஆண்டு முதல் பல்கலைக்கழகத்துடன் இந்திய விமானப்படை நல்கி வரும் ஒத்துழைப்பைக்குக்கு நன்றி.

இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் உதவி தலைமை தளபதி ஏர் வைஸ் மார்ஷல் ராஜீவ் ஷர்மா பேசுகையில்:

இந்திய விமானப்படையின் மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு அங்கமான ஆகாஷ்தீப் திட்டம் விமான படை வீரர்களின் உயர் கல்வி விருப்பங்களை நிறை வேற்றுகிறது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்திய விமானப்படை பாண்டிச்சேரி பல்கலைக் கழகத்துடன் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்திய விமானப்படையின் தேவைக்குற்பட்ட துறைகளில் விமானப்படை அதிகாரிகள் தங்கள் பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை தொடருவார்கள். இந்திய விமானப் படை புனே பல்கலைக்கழகம் மற்றும் கான்பூரில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகம் ஆகியவற்றில் சிறப்புத் இருக்கைகளையும் உருவாக்கியுள்ளது. இந்திய விமானப்படையில் திறன் மேம்பாடு மற்றும் பிரச்சனைகளுக்கு உள்நாட்டு தொழிற்நுட்பங்களை கொண்டே தீர்வுகளை பெற ஊக்குவித்து வருகிறது. பல்வேறு துறைகளில் உயர் தகுதிகளை அதிகாரிகள் பெறுவது, ஆகாஷ்தீப் போன்ற திட்டங்களின் நோக்கங்களை அடைய எதுவாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் பல்வேறு புல முதல்வர்கள் மற்றும் துறை தலைவர்களுடனும் அவர் உரையாடினார். பேராசிரியர் ராஜீவ் ஜெயின், சிறப்பு அதிகாரி (கலாச்சாரம் மற்றும் கலாச்சார உறவுகள்), பல்வேறு புல முதல்வர்கள் மற்றும் துறை தலைவர்களும் கலந்து கொண்டனர்.

DINAMALAR

6 MAR 2022

PAGE 2

# விமானப்படை வீரர்களுக்கு பட்டப் படிப்பு துணைவேந்தர் குர்மீத் சிங் உறுதி

**புதுச்சேரி, மார்ச் 6–**

'புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் விமானப்படை அதிகாரிகள் மட்டுமின்றி, வீரர்களுக்கும் பட்டப் படிப்புகளை வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்படும்' எனதுணைவேந்தர் குர்மீத் சிங் பேசினார்.

புதுச்சேரி பல்கலைக் கழகம், இந்திய விமானப் படை கல்வி இயக்குநரகம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன் மூலம் விமானப் படை அதிகாரிகள் புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில் முதுகலை படிப்பு, ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளலாம்.

இந் நி க ழ் ச் சி யி ல் , துணைவேந்தர் குர்மீத் சிங் பேசியதாவது:

தேசத்தின் மீதான இந்திய ராணுவ வீரர்களின் அர்ப்பணிப்பு போற்றக்கூடியது. அவர்களின் கடமை உணர்வு, நேரக்கட்டுப்பாடு, பணி சார்ந்த அணுகுமுறையை மற்றவர்கள் முன்மாதிரியாகக் எடுத்துக்கொள்ள வேண்டும்.

எதிர் காலத்தில் பல்கலைக்கழகத்தின் தொலைதூரக் கல்வி இயக்குநரகம் மூலம் அதிகாரி மட்டுமின்றி, விமானப்படை வீரர்களுக்கும் பட்டப் படிப்புகளை வழங்குவது குறித்து பல்கலைக்கழகம் பரிசீலிக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

உதவி தலைமை தளபதி ஏர் வைஸ் மார்ஷல் ராஜிவ் ஷர்மா, கலாசாரம் மற்றும் கலாசார உறவுகள் சிறப்பு அதிகாரி ராஜிவ் ஜெயின், இந்திய விமானப்படை குழு, குரூப் கேப்டன் சக்தி ஷர்மா, பல்கலைக்கழக விரிவு திட்டம் துணை இயக்குநர் வைத்தியநாதன்.

சர்வதேச உறவுகள் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் புல முதல்வர் சுப்ரமணியம் ராஜி, ஒருங்கிணைப்பாளர் ஹுமாயூன் கலந்து கொண்டனர்.



■ புதுச்சேரி பல்கலைக்கழக தொலைதூர கல்வி இயக்குநரகத்தில் இந்திய விமானப் படை அதிகாரிகளுக்கான படிப்புகள் வழங்குவது குறித்து துணைவேந்தர் குர்மீத் சிங், உதவி தலைமை தளபதி ஏர் வைஸ் மார்ஷல் ராஜிவ் ஷர்மா முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.